யிலே அறுவை சிகிச்சை செய்வது சிரமமாக இருந்தாலும் கூட மாதனூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திலே கண் சிகிச்சைக்குக் கூட, அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்கள். எனவே, சுற்றுப்புற பகுதிகளையும்கூட கணக்கிலே கொண்டு இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை தந்து இதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் பிரச்சினையே இல்லை. நிதி தான் பிரச்சினை. இப்பொழுது நிதிநிலைமையில் இந்த ஆண்டு நாம் இதை சேர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லை என்ற காரணத்தினால் தான் அதைத் தெரிவித்தேன். எனவே, எதிர்காலத்திலும் கூட உத்தரவாதமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்க்கிறபோது அதிலே தனி முக்கியத்துவம் இருக்குமோ என்று தோன்றுகிற காரணத்தால் தனியாக ஒரு ஆய்வு மேற்கொள்ளலாம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், உடனடியாக, இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 504, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

504—

பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டுக்களை யு. கோ. வங்கி மூலம் பயணிகளுக்கு விற்பனை செய்தல்.

*16383—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்கள் உள்ளிட்ட பஸ் பயணிகளுக்கு மாதாந்திர காலவரை பயணச்சீட்டுகள் விற்பனை செய்ய யுனைடெட் கமர்சியல் வங்கியுடன் பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1994 மே 4]

(அ) மற்றும் (ஆ): பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மாதாந்திர ''விருப்பம் போல் பயணம்'' பயணச் சீட்டு விற்பனை செய்யும் பொறுப்பை சில விதி முறைகளுக்குட்பட்டு யு. கோ. வங்கி கடந்த பிப்ரவரி 1992-லிருந்து செய்து வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே போன்று பல்வேறு வங்கிகள் முன்வந்தால் அந்த வங்கிகளுக்கும் அரசு இந்த ஆணையை வழங்க முன்வருமா ? அதன்மூலம் மக்களுக்கு கூடுதல் வசதி கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்று எந்த வங்கிகள் முன்வந்தாலும் அதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள சி.டி.சி. பஸ் போக்குவரத்துக் கழகத்திலே இருந்து, அந்தந்த பிராஞ்சுகளில் அங்கே வங்கிகளில் இந்த முறையைப் பயன்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகம் மற்றும் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும் தான் இம்முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. சேரன் போக்குவரத்துக் கழகத்தைப்போல அங்கே இருக்கின்ற பல்வேறு கழகங்களிலே அதுபோன்ற நிலைமையை உருவாக்குவதற்கு மக்கள் முன்வருவார்களானால் அரசு அதைப்பற்றி, பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 505, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.